மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நாளையதினம் கர்நாடக மாநில முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அச்சத்தையும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற துன்பத்தையும் விரைவில் நீக்குவதற்கான நல்ல முடிவு ஒன்று எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அரசாங்கம் ஏற்கெனவே இதில் அக்கறை எடுத்துக் கொண்டுள்ள காரணத்தால் சட்டமன்ற நடவடிக்கைகளை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி மேலும் விவாதிக்கத் தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (இ) சென்னை, சேலம், ஈரோடு கோவை போன்ற பகுதிகளில் மாணவரிடையே அமைதியின்மையும் பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ந. இராமச்சந்திரன், திரு கே. சுப்பு ஆகியோர் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 42-ன் கீழ், கீழ்க் காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த நிகழ்ச்சி குறித்து பேரவையில் விவாதிக்க பேரவையின் இன்றைய அலுவல் களை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக சென்னை, சேலம், ஈரோடு, கோவை போன்ற பகுதிகளில் மாணவர் மத்தியில் அமைதியின்மை உருவாகி போராட்டங்கள் வெடிப்பதால் பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தி அமைதியை நிலைநாட்டவும், மாணவர்களின் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது குறித்து விவாதிக்க."

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஒரு சம்பவத்தைக் குறித்துதான் இருக்க வேண்டுமேயொழிய பல பொருள்கள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கக் கூடாது என்பதற்குப் பல தீர்ப்புக்கள் இருக்கின்றன. மேலும் உறுப்பினர்கள் இது குறித்து எழுப்புவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதனாலும் இதற்கு அனுமதிகொடுக்க மறுக்கிறேன்.